**O.S. No. 98 /2019**

**Date:09.04.2026**

**பி வா.சா. 2 செந்தில்குமார்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி மொத்தம் எத்தனை தபசில் சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. தபசில் சொத்தில் சர்வே எண். 806/5 A ஐ பொருத்து எதிர் வழக்கு நடத்துகிறேன். தாவா சொத்து ஆதியில் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை சீனிவாசன் என்பவர் பெயரில் எழுதிகொடுத்துவிட்டார் என்று சொல்லிதான் எதிர் வழக்கு செய்கிறேன். சீனிவாசன் எனது உடன் பிறந்த சகோதரர். பி.வா.சா.ஆ.9 ஆவணம் மூலமாக சீனிவாசன் எனக்கு செட்டில்மெண்டு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி செட்டில் மெண்டு ஆவணம் எவ்வளவு இடத்திற்கு எழுதிக்கொடுத்தார் என்றால் 1 1/2 ஏக்கர் – 2 ஏக்கர் வரை எழுதிக்கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் கண்டஇடத்தில் பி.வா.சா.ஆ.9 ஆவண காலத்திற்கு முன்பே தீப்பெட்டி தொழிற்சாலை கட்டப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் கண்ட இடத்தில் எவ்வளவு இடத்தில் கட்டிடங்கள் உள்ளது என்றால் 1 ஏக்கர் வரையும் உள்ளது. மேற்படி கட்டிடம் இடம் போக மீதம் உள்ள இடம் காலியாகத்தான் உள்ளது. கட்டிடங்கள் எந்த எந்த சர்வே எண்களில் உள்ளது என்று சொல்ல முடியுமா என்றல் தனிப்பட்ட முறையில் சொல்ல முடியாது. எந்த சர்வே எண்ணில் உள்ள இடம் காலியாக உள்ளது என்றும் தனிப்பட்ட முறையில் சொல்ல முடியாது. மேற்படி கட்டிடம் கட்டியதற்கான வரைபடத்தை பார்த்தால் கட்டிடம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று தெரியும் என்றால் சரிதான். மேற்படி

கட்டிட அனுமதி என் கைவசம் உள்ளது. கட்டிட வரைபட அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் உண்டா என்றால் காரணம் ஏதும் இல்லை. பிராது 4ம் அயிட்ட சொத்தில் எவ்விதமான கட்டிடங்களும் இல்லை என்பது மன்றத்திற்கு தெரியவரும் என்பதால் கட்டிடத்தின் அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை வாதி எந்த காலத்திலும் சீனிவாசனுக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாளது தேதிவரையிலும் பிராது 4ம் அயிட்ட சொத்து வாதியால் தான் அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. பட்டா எனது பெயருக்கு தவறுதலாக கொடுக்கப்பட்விட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 10 சொத்து வரி ரசீதுகள் நான் கட்டியுள்ள கட்டிடங்களுக்கு போடப்பட்ட ரசீதுகள் என்றாலும், காலியிடங்களுக்கு போடப்பட்ட ரசீதுகள் அல்ல என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.12 ஆவணம் ரசீது தீப்பெட்டி தொழிற்சாலைக்குண்டானது தான் என்றாலும், அது தபசில் சொத்திற்கு அல்ல என்றாலும் சரியல்ல. தபசில் சொத்தானது இந்த வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வாதி கோரும் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.